# ஆண்டவரின் இராவுணவுத் திருப்பலி

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

விடுதலைப்பயண நூலிலிருந்து வாசகம் 12:1-8, 11-14,

திருப்பாடல்கள் 116:12-13, 15-18,

கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்திலிருந்து வாசகம் 11:23-26,

யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 13:1-15

## திருப்பலி முன்னுரை:

உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன் என்று பறைசாற்றிய இயேசு, பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே என்று தன் சீடர்களின் பாதங்களைக் கழுவி, இறையரசுப் பணிக்குச் சான்று பகர்ந்து, தன் மீட்புப் பணி தரணியில், திருத்தூதர்கள் வழி தொடர்ந்து நீடிக்கவும், அருட்சாதனங்களின் வழி அருளை அளவில்லாமல் ஆன்மாக்களின் மீது பொழியவும், விண்ணகம் நோக்கிய பயணத்தில் இருக்கும் நமக்கு, வழிப்பயணக் கொடையாகவும், இன்சுவை உணவாகவும், தன் உடலையும், இரத்தத்தையும் தானமாய் கொடுத்து, நற்கருணை என்ற திருவருட்சாதனத்தை ஏற்படுத்தி, நான் உங்களுக்கு அன்பு செய்தது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செய்யுங்கள் என்று அன்புக்கட்டளை வழங்கிய நன்னாள் இன்று. ஆம் இன்று திருப்பாடுகளின் பெரிய வியாழன். இயேசுவின் பணிவு அவரது அன்பு பணிக்கு பெருமை சேர்த்ததுபோல, வாழ்வுக்கு அவரது கல்வாரி மதிப்பீடுகள் அடித்தளமாய் அமைய இன்றைய வழிபாட்டிலே மன்றாடுவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. வார்த்தையான இறைவனே!**

எம் திருச்சபையின் ஊழியர்கள் உம் வார்த்தையின் வழியில் பயணித்து இறைமக்களை அன்பின் வழியிலும், ஒளியிலும் வழிநடத்தவும், உமது வழியைப் பின்பற்றி எம் திருச்சபை அகிலமெங்கும் தழைத்தோங்கவும் வேண்டுமென்று இறைவா உம்மை வேண்டுகிறோம்.

**2. அன்பின் இறைவா!**

எம் தலைவர்கள் தங்களின் தலைமைப் பொறுப்பினையும், கடமையினையும் உணரவும், மக்களை செம்மையாகவும் நீதி, நியாயம், மனிதமாண்பு, ஆகிய நல்ல நெறிகளுடன் வழிநடத்தவும், தேவையான ஞானத்தைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. ஒளியாம் இறைவா!**

உம்மையும், உம் வார்த்தைகளையும் பின்பற்றும் நாங்கள் உமது அன்பையும் பகிர்வையும் தியாகத்தையும் எங்கள் வாழ்வில் பிரதிபலிக்கவும் எங்கள் அன்றாட வாழ்க்கையில் உம்மை மையமாக வைத்து உம் அன்பின் மக்களாக வாழத் தேவையான அருளைத் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**4. நித்திய குருவான இறைவா!**

உம் அடிச்சுவடுகளைப் பின் தொடர்ந்து உமது பணியைச் செய்ய தங்களையே அர்ப்பணித்திருக்கின்ற குருக்களுக்காக வேண்டுகிறோம். நீர் குருத்துவத்தை ஏற்படுத்தியிருக்கின்ற இந்நாளில் அவர்கள், தங்களின் பணிவாழ்வில் சந்திக்கும் அனைத்துத் துன்பங்களையும், பொறுமையுடனும் இன்முகத்துடனும் ஏற்றுகொள்ளத் தேவையான அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.